# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.2/2020.
Prosecution witness for P.W. 32 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஹரிகரன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2026.

A1, 8, 10, 19, 13 died. A3, 7, 9 absent. 317 Crpc petition filed. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் முறப்பநாடு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு சிப்காட் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது புதியம்புத்தூர் காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண் 10/2017 இதச 147, 148, 341, 302, 120 பி, 114, 149 மற்றும் 506(2) பிரிவுகள் படியான வழக்கை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 22.02.2017 அன்று அ.சா.1, அ.சா.4, அ.சா.2, அ.சா.22 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு 02.04.2017 அன்று 3ம் எதிரியை 13 மணியளவில் புதுர்பாண்டியாபுரம் மேம்பாலத்திற்கு அருகில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு 10.04.2017 அன்று சாட்சிகளான வின்சென்ட், செல்வி. ரம்யா, அ.சா.9, அ.சா.3, அ.சா.6, அ.சா.12, அ.சா.29 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு 05.05.2017 அன்று சாட்சிகளான ஆதவன், பாலகிருஷ்ணன், அ.சா.21, ரவிக்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பிறகு இந்த வழக்கில் பிணையில் வந்த எதிரிகளான 14, 11 எதிரிகளை

விசாரித்தபோது 14ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த வாக்கு மூலத்தை சாட்சிகள் அ.சா.17 மற்றும் ஜான் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். 14ம் எதிரி புதூர்பாண்டியாபுரம், தூத்துக்குடி – துறைமுகம் மதுரை நான்குவழிச் சாலை பாலத்தின் வடபுறம் உள்ள முட்புதரிலிருந்து ஆஜர் செய்த அரிவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 69**. மேலும் 11ம் எதிரி கொடுத்த வாக்குமூலத்தையும் பதிவு செய்து அவர் அதே இடத்திலிருந்து ஆஜர் செய்த கத்தியை மகஜரில் கைப்பற்றி அதே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 70**. மேற்படி அரிவாள் மற்றும் கத்தி **சா.பொ.21 மற்றும் 22**. பிறகு 1ம் எதிரியை 06.05.2017 அன்று விசாரித்தபோது அதே சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பிறகு 1ம் எதிரி தூத்துக்குடி FCI ரவுண்டானா அருகில் அழைத்துச் சென்று மைதீன் யார்டு பின்புறமாக ஆஜர் செய்த TN 69 AF 8987 என்ற பதிவெண் கொண்ட காரை மகஜரில் கைப்பற்றி அதே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 71**. பிறகு வழக்கு சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். பின்பு 25.05.2017 அன்று அறிவியல் அலுவலரான அ.சா.28–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.06.2017 அன்று உதவி ஆய்வாளர் திரு.வீரபாகு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.06.2017 அன்று சாட்சிகள் அ.சா.26 மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சித்திரைவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு புலன் விசாரணையை முடித்து இதச 147, 148, 341, 302, 506(2), 120 பி, 114 மற்றும் 149 பிரிவுகள் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். என்னிடம் சாட்சிகள்

சொன்னதைத்தான் நான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன். இந்த வழக்கின் 8 மற்றும் 10 எதிரிகள் இந்த வழக்கு சம்பவத்திலிருந்து சுமார் 10 மாதங்கள் கழித்து பழிவாங்கும் விதமாக கொலை செய்யப்பட்டார்கள். அந்த வழக்கிலும் நான்தான் புலன் விசாரணை அதிகாரி.

குறுக்கு விசாரணை

11, 14 எதிரிகளை நான் விசாரிப்பதற்கு முன்பாக அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பவில்லை என்றால் சரிதான். பிணையின்பேரில் கையொப்பமிட வந்தவர்களை நான் விசாரித்தேன். 05.05.2017 அன்று மேற்படி எதிரிகளை விசாரித்து அதற்கான கைப்பற்றுதல் மகஜர்களை 18.07.2017 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். 1ம் எதிரியிடம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களையும், கைப்பற்றுதல் மகஜர்களையும் 18.07.2017 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். மைதீன் யார்டு அருகில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதற்கு அங்குள்ள மேலாளரையோ, உரிமையாளரையோ நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அங்கு மகஜர் சாட்சிகள் இருந்ததால் அவர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் எந்த சாட்சியையும் விசாரிக்கவில்லை என்றும், எதிரிகளையும் கைது செய்யவில்லை என்றும், எந்த எதிரியையும் விசாரிக்கவில்லை என்றும், எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும், எதிரிகள் யாரும் எந்த பொருளையும் ஆஜர் செய்யவில்லை என்றும், நான் நிலையத்திலேயே அமர்ந்து கொண்டு புலன் விசாரணையே செய்யாமல் ஆவணங்களை தயாரித்துக் கொண்டு தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.10 19:24:20 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.